184872

JL
LCM211,N28ST
N284.10
184872

Registered. No. M, 1640. வருஷச் சந்தா ரூபா. 1.

# ஸ்ரீ தன்வந்தரி

OFFICE OF THE REGISTRAR OF ... No. 2 - OCT 1928

ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை.

ஒவ்வொரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசுரிக்கப்படும்.

பத்திராதிபர். டாக்டர். ஆ. லக்ஷ்மீபதி, பி ஏ., எம். பி., ஸி. எம்.,

உதவிபத்திராதிபர். டாக்டர். உ. ர. அரங்கசாமி ராஜு, ஏ. எம். ஏ. ஸி.

| மலர் 1. | 1928ஹு மார்ச்சு—ஏப்ரல் | இதழ். 11—14 |
|---|---|---|

## பொருளடக்கம்.

—:o:—

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | இரும்பின் மேன்மை | 1 |
| 2. | இறந்தவள் மீண்டும் உயிர் பெற்றது | 2 |
| 3. | "மருந்துப் பெட்டி" | 2 |
| 4 | வியாயாம சாஸ்திரம் | 3—4 |
| 5. | கேசங்களின் பாதுகாப்பு | 5 |
| 6. | தேன் | 6 |
| 7. | சிலாஜித்து | 6—8 |
| 8. | வியாதிகளின் குறிப்பு | 8—9 |
| 9. | நூறு உபயோகமான ஔஷதச் சரக்குகள் | 41—56 |

# ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

## முகவுரை.

இந்த ஔஷதசாலை 1920௵, ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்டு எக்காலத்திலும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத ஔஷதங்கள் வேண்டிய அவ்வளவு சரியாக கிடைப்பதில்லை யென்கிற குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, டாக்டர் ஆ. லக்ஷ்மீபதி அவர்களால் மூன்று லக்ஷரூபாய் மூலதனத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. கீழ்க்கண்டவைகள் இதன் முக்கிய நோக்கங்கள்.

(1) எல்லா மருந்துச் சரக்குகளையும் மூலிகைகளையும் சேகரித்தல், தற்சமயம் வழக்கத்திலில்லாதவைகளைக் கண்டு பிடித்தல், கெட்டுப் போகாமல் காப்பாற்றி வைத்தல், வேண்டுபவர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்தல் முதலியவை.

(2) பண்டைக் காலத்தியவையும் தற்காலத்தியவையுமாகிய ஸாதனங்களைக் கொண்டு முக்கியமான மருந்களை எல்லாம் செய்தல்.

(3) ஆயுர்வேத சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்யக் கூடியவையும் ஆயுர்வேத விஷயங்களை அறிவுறுத்தக் கூடியவையுமாகிய துண்டுக் காகிதங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவைகளைப் பிரசுரித்தல்.

இவ்வௌஷத சாலையை ஆரம்பித்த கொஞ்ச காலத்திற்குள்ளாகவே இதில் செய்யப்படும் ஔஷதங்களின் பரிசுத்தத் தன்மைக்காகவும் சிறந்த குணத்திற்காகவும் நற்புகழ் உண்டாயிருப்பது திருப்தியாக யிருக்கிறது. அகில இந்திய ஆயுர்வேத மகாநாட்டிலும் மற்ற மகாநாடுகளிலும் முதற்றரப் பொற்பதக்கங்களை பரிசளித்ததற்கேற்ப பொது ஜனங்களும் வைத்தியர்களும் எங்களிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கை பெரும் பரிசாக இருக்கிறது.

தற்சமயம் கிடைக்கும் அனேக ஔஷதங்கள் சாஸ்திரப் பெயருள்ளவையாயிருப்பினும் சாஸ்திர முறைப்படி செய்யப்படாமல் சாஸ்திரத்தில் சொல்லியுள்ள முக்கியமான சரக்குகள் கூட சேர்க்கப்படாமல் செய்யப்பட்டவை யென்கிறதை கவனிக்கும் படியாகவும், மருந்துகளைப் பரிசுத்தமாகச் செய்யும் எங்கள் பார்மஸியின் மருந்துகளா வென்றறிய மருந்தின் மேல் "ஆந்திர" என்கிற பதத்தை கவனிக்கு மாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம். எங்கள் கம்பெனியின்' "ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்" என்கிற முழுப்பெயரையும் கவனிப்பீர்களாக.

# ஸ்ரீ தன்வந்தரி

ஆயுர்வேத வைத்திய பக்ஷ பத்திரிகை.

ஒவ்வோரு திரயோதசிக்கும் வெளியாகும்.

சென்னை ஆயுர்வேத கலாசாலையின்

பழைய மாணவர்களின் சங்கத்தின் சார்பில் பிரசுரிக்கப்படும்.

| மலர் 1. | 1928௵ மார்ச்சு—ஏப்ரல் | இதழ். 11—14 |
|---|---|---|

## இரும்பின் மேன்மை

உண்மையில் துருப்பிடிப்பதனுல். இரும்பு எல்லா வற்றையும் விட சிறந்த உலோகமாகும். வெள்ளி, தங்கம் முதலியவைகளைப் போன்று இரும்பு துருப்பிடிக்கா திருந்தவிடில், நாம் இன்று உலகத்திலேயே வாழமுடியாது; மரஞ் செடிகள் பசுமையோடிருக்கா. பூமிக்குப் பல அழகிய நிறத்தைக் கொடுப்பதும், சிகப்பு போன்ற இரத்தினங்களுக்கு நிறத்தைத் கொடுப்பதும் இந்த இரும்புத் துருதான். இத்துரு தண்ணீரில் கலந்திராவிடில், அவற்றை உட்கொள்ளும் தாவரங்களும் பசுமை நிறத்தோடு விளங்கா. மானிட சரீரத்திற்கு இன்றியமையாத இரத்தத்தைச் சிகப்பாகி வாழச் செய்வதும் அத்துருவே. ஆகையால் பூமியில் ஜீவராசிகள் வாழ்வதற்கும், பல நிறங்களுடன் அழகுறத் தோன்றுவதற்கும் முக்கியகாரணமாயிருப்பது இரும்புத் துருதான். "இளைத்த இரும்பைத்தின்ன வேண்டு" மென்று ஒருவன் பழமொழி வழங்குவதையும், நாட்டு வைத்தியர்களேயன்றி மெனுட்டு வைத்தியர்களும் இளைத்தவருக்கு இரத்த விருத்திக்காக இரும்புத் துரு (அயச்செந்தூரம்) கொடுத்து வருவதையும் நாம் கண்கூடாகக்காண்கிறோம். நமது கத்தி முதலியவைகள் துருப்பிடித்து விடுவதால் துருவை நாம் வெறுக்கிறோம். முற்காலத்தவர் இரும்பைக் கேவலமாக நினைத்திருந்த போதிலும் உண்மையில், துருப்பிடிக்கும் குணத்தோடு கூடிய இரும்பே, உலகம் நீடித்திருப்பதற்குக் காரணம்.

"இந்து நேசன்"

# இறந்தவள் மீண்டும் உயிர் பெற்றது

மதுரை சிங்காரத்தோப்புத் தெருவிலுள்ள ஸ்ரீமான் ராமசாமி நாயுடுவின் புத்திரியான சுமார் 18 வயதுள்ள பெண் நீண்டகாலமாக க்ஷயரோகத்தினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். மூன்று மாதங்களுக்கு மேலாக அமெரிக்கன் மிஷன் ஆஸ்பத்திரியில் வைத்திய சிகிச்சையில் இருந்துவந்தாள். கடைசியில் வியாதி நிவர்த்தியாகாது என்று சொல்லி அவளை அங்கிருந்தே அனுப்பிவிட்டார்கள். பின்னர் அவ்வூரிலுள்ள சித்த வைத்திய சங்க வைத்தியர் ஸ்ரீமான் ஜி. ஏ. சின்னு நாயுடு என்பவரிடம் சென்று அப்பெண்ணுக்காக வைத்திய உதவியை நாடினார்கள். அவர் இவ்வியாதியானது முற்றி விட்டதென்றும் மருந்து கொடுப்பதினால் பிரயோஜனமில்லை யென்றும் ஆனபோதிலும் அன்றிரவிற்கு ஒரு மருந்து கொடுப்பதாயும் சொல்லி மறு நாள் அவள் உயிருடனிருந்தால் நேரில் வந்து பார்ப்பதாயும் சொன்னார்.

மறு நாள் 9-ம் தேதியன்று அப்பெண் சற்று குணமடைந்ததாகத் தெரிகிறது.

அதன் பேரில் மீண்டும் வைத்தியர் ஸ்ரீமான் நாயுடு மருந்து கொடுத்தார். அன்று பூராவும் அப்பெண் குணமாகவே காணப்பட்டாள். மூத்திரம். முதலியவை நன்கு போயிற்று. மூன்று தரம் மலவிசர்ச்சனமும் ஆயிற்று. திரேக உஷ்ணமும் சரியான நிலைமைக்கு வந்தது. நல்ல ஞாபகத்துடனும் இருந்தாள். அத்தகைய நிலையில் 10ஆம் தேதி காலை வரையில அவள் இருந்தாள். அதன் பின்னர் அவளுடைய உயிரானது போகுந்தருவாயில் இருப்பதாகக் காணப்படவே டாக்டர்களை அழைத்து வந்து பரிசோதிக்கப்பட்டது. டாக்டர்கள் பெண் இறந்துவிட்டாளென்று சொல்லிப் போய்விட்டனர். பின்னர் இறந்த பிணத்திற்கு செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்ய ஆரம்பித்தனர். இறந்த செய்தியை உறவினர்களுக்கு தந்திச் செய்திகள் அனுப்பட்டன.

அச்சமயத்தில் ஸ்ரீமான்நாயுடு பெண் இறந்து போனாள் என்ற விஷயம் தெரியாமல் அங்கு வந்து சேர்ந்தார். உள்ளே சென்று இறந்து போன வியாதியஸ்தரைக் கண்டார். பின்னர் அப்பெண்ணை ஸ்ரீமான் நாயுடு பரிசோதித்துப் பார்த்து அப்பெண்ணின் உயிரை மீண்டும் கொண்டுவருவதாகச் சொன்னார். அதன் பிறகு அப்பெண்ணின் கண்ணில் கலிக்கம் ஒன்று போட்டு அவள் தலையின் மீது தண்ணீரைப் பலமாக அடிக்கும்படி சொன்னார். சிறிது நேரம் சென்ற பிறகு எல்லாரும் திடுக்கிடும்படியாக இறந்துபோன பெண் அசைய ஆரம்பித்து பெருமூச்சு விட்டுக் கத்த ஆரம்பித்தாள். பின்னர் அவளுக்கு காப்பியோடு மருந்து கலந்து கொடுக்கப்பட்டது. சோடா, ஜீனி, ரசம் முதலியவை கொடுக்கப்பட்டன. ஆழ்ந்த தூக்கத்தினின்று எழுந்தாற்போல் அப்பெண் எழுந்து பேச ஆரம்பித்தாள். இப்போது அப்பெண் குணமடைந்து வருகிறாள். ஸ்ரீமான் சின்னு நாயுடு என்பவர் தான் சிகிச்சை செய்து வருகிறார். "ஸ்வராஜ்யா"

---

## "மருந்துப்பெட்டி"

காலையில் எழுந்தவுடன் எலுமிச்சம் பழரசத்தைச் சிறிது ஜலத்தில் கலந்து குடித்தால் மக்கள் பல நலங்களை யடைவதுடன் மேனியும் மினுமினுப்படையும். நீண்ட நாள் இந்த வழக்கத்தை மேற்கொண்டால் மக்கள் மேனி சிறக்கும். பாரிஸ் நகர மாதர்கள் அழகு பெறுவதற்காக எலுமிச்சம் பழரசத்தைத் வழக்கமாகக் குடிக்கிறார்களாம். எலுமிச்சம்பழ ரசத்தைத் தலைக்கும் உடம்புக்கும் தேய்த்துக் கொண்டால், வெம்மை நீங்கிக் குளிர்ச்சி ஏற்படும். கண்ணிலே அப்பழரசத்தை விட்டால் கண் நோய் நீங்குவதுடன் கண்தெளிவும் ஏற்படும்.

துணிமணிகளில் எலுமிச்சம் பழரசத்தை விட்டால் அவற்றிலுள்ள கறைகள் நீங்கி, புதியவைபோல் வெண்மையாகிவிடும். பாத்திரங்களையும் எலுமிச்சம் பழரசத்தால் சுத்தஞ் செய்யலாம். குடிதண்ணீர் சுத்த மற்றதாயிருந்தால் அதனை எலுமிச்சம் பழரசத்தில் கலந்து சாப்பிடலாம். எலுமிச்சம் பழரசம் கலந்த கரித்தூளால் பற்கள் நன்றாய்த் துலங்கி வெண்மை பெறும். இன்னும் பல காரியங்களுக்கு எலுமிச்சம் பழம் பயன்படும். ஆகையால் மேனாட்டார் இப்பழத்தை மருந்துப் பெட்டி யென்பார். "இந்து நேசன்"

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184872





சொல்லுமுலகம் துயரற் றிருந்திடவே
வெல்லு முபாயம் விரும்பியசீர் நல்லுரவோன்
மன்வந் தரம்போற்ற மாமருந்து நூற்கண்ட
தன்வந் தரிதாள் சரண்
ஆதி மருத்துவ நூல் ஆரிடத்திற் கண்டடி
மேதினியோர் போற்ற விளக்கிய நற்
—போதகாரம்
நற்பண்டித கோபாலாச்சாரி நற்பதங்கள்
பொற்புறவே எந்நாளும் போற்று.

---

# வியாயாம சாஸ்திரம்.

(தொடர்ச்சி)

சர். எம். விஸ்வேஸ்வரைய்யர் 30 வருட காலம் இந்திய அதிகாரவர்க்கத்திலிருந்து அனுபவம் வாய்ந்த பெரியார். அவர் தற்கால கவெர்மெண்டு சமாதானத்தை நாடுகிறதேயல்லாமல் நம்முடைய முற்போக்கை நாடவில்லை என்று சொல்லுகிறார். அது நமது நாட்டு ஜனங்களின் தேக பலத்தை விருத்தி செய்யும் உபாயங்களை அறவே அலக்ஷியம் செய்வதில் நன்றாய் விளங்குகிறது நம்முடைய நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் தாலிம்கானா என்ற சிலம்பக் கூடங்கள் இப்பொழுது காணமற் போய் விட்டன. தேகப்பயிற்சியில் தேர்ந்த வஸ்தாவதிகளுக்குச் சரியான பராமரிப்பில்லாததால் குன்றுகின்றார்கள். தேகப் பயிற்சியில் தேர்ந்த வஸ்தாவதிகளுக்குதுர் அதிர்ஷ்டவசமாய் கல்வித்தேர்ச்சியில்லாமையால் முரடர்களாயிருக்கிறார்கள். இக்காலத்தில் பலம் மிகுந்தவஸ்தாவதியைக் காட்டிலும் மெலிந்த தேகத்தையுடைய எம். ஏ. பட்டம் பெற்றவர்களுக்கு அதிக மதிப்பிருக்கிறது. நம் வஸ்தாவதிகள் அன்னிய நாட்டில் பிறந்திருப்பார்களானால் தங்களுடைய தைரியத்தாலும் வீரதீரச் செய்கையாலும் சேனையின் தலைவர்களாயிருந்திருப்பார்கள். சீக்கிரத்தில் கால நிலைமைமாறுபடுமென்று நாம் நினைக்கிறோம். நம் சர்வகலாசாலை மாணக்கர் நம்முடைய கல்விமேன்பாட்டில் எவ்வளவு கௌரவம் கொண்டாடுகிறார்களோ அவ்வளவு தம் தேகபலத்திலும் அவர்களுக்கு கௌரவம் உண்டாகும் வரை நம்முடைய கல்வித்திட்டம் ஒரு சார்பானதென்று நினைக்க வேண்டும். தேகபலத்தை வற்புறுத்தும் பொருட்டு மாணக்கர்களுக்கு தேகப்பயிற்சியைக் குறித்த புத்தகங்களை இனமாய்க்கொத்தலும், தேகபலத்தை காட்டுபவர்களுக்குத் தக்க இனம் அளித்தலும் ஆகியபிரசார வேலை அதிகமாய்ச் செய்ய வேண்டும். அயல் நாடுகளில் அத்தேசத்தவர் தேகபலத்தை வளர்க்கக்கூடிய உபாயங்களை அதிகமாய் கையாண்டு வருகின்றனர். அவர்கள் கையாடும் இயக்கத்தின் எதிரொலியாகவே நம் நாட்டில் சாரணர் இயக்கம் போன்றவைகள் காணப்படுகின்றன.

## தேகப்பயிற்சியின் பயன்கள்

"தேகப்பயிற்சி தேகத்தின் எடையை அதிகரிக்கிறது, சர்மத்திற்கு மினுமினுப்பைக் கொடுக்கிறது, பசி தீபனத்தை உண்டாக்குகிறது. மாமிசபேசிகளுக்கு அழகையும் வலிமையையும் கொடுக்கிறது. தேக, மன உருதியை

உண்டாக்குகிறது. சோம்பலைப்போக்கி சுரு சுருப்பை உண்டாக்குகிறது. வியாயாமம் பலவீனத்தையும் சிரமத்தையும் போக்குகிறது. இது உஷ்ணத்தையும், குளிர்ச்சியையும் தாங்கக் கூடிய சக்தியைக் கொடுக்கிறது சுருங்கச் சொல்லில் வியாயாமத்தைச் சரியாக அப்பியசிப்பவனுக்கு சரீரசுகம் மேன்பாடு அடையும் என்பது நிச்சயம்'' என்று 2000 வருடங்களுக்கு முன்னரேயே சுஸ்ருதரால் சொல்லப்பட்டிருக்கிறது.

''வ்யோரூப குணைர் ஹீனமபி
குர்யாத் சுதர்சநம்.''

வயதிலும், அழகிலும், குணத்திலும், குறைந்தவனாயிருப்பினும் கூட வியாயாமம் சரியாய்ச் செய்வானேயாகில் நல்ல தோற்றத்தையுடையவனாகக் காணப்படுவான்.

''வியாயாமம் குர்வதோ நித்தியம்
விருத்தமபி போஜனம்.

விதக்தம் அவிதக்தம் வா நிர்தோஷம்
பரிபச்யதே.''

வியாயாமத்தைச் சரியாய் அப்பியசிப்பவனுக்கு அஹிதமான ஆகாரமும், சரியாய்ச் சமைக்கப்படாத ஆகாரமும் அளவு மீறி சமைக்கப்பட்ட ஆகாரமும் சரியாய் ஜீர்ணமடையும்.

''வ்யாதயோ நோபசர்பந்தி ஸிம்ஹம்
க்ஷுத்ர மிருகாயிவ.''

நச வியாயாமினம் மர்தியா மர்த
யந்தி அரயோபயாத்.''

நசைனம் சஹசாக்ரம்ய ஜரா நசமதி
ரோஹதி.''

வனத்தில் வாழும் சிறியமிருகங்கள் எப்படி புலியை அணுகாவோ அப்படியே பிணிகள் வியாயாமத்தில் தேர்ந்தவனை அணுகா. பகைவர்களும் அவனை அணுக பயப்படுவார்கள். மற்றவர்களைப் பீடிக்கும் முதுமைகூட அவனை சுலபத்தில் அணுகா.

(தொடரும்.)

---

## மாதீபல ரஸாயனம்.

அளவு:—$\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ அவுன்ஸ்.

உபயோகம்:—அரோசகம், வாந்தி, மயக்கம், பித்தக்கோளாறு இவற்றைப் போக்கும்; அஜீர்ணமும் பசியின்மையும் தீரும்; கர்ப்பிணிகளுக்குண்டாகும் வாந்தியை போக்கும்; ஜ்வரத்தில் தாபத்தைத் தணிப்பதற்கும் உபயோமானது.

விலை 1 பவுன் ரூ. 3.

## சந்தனாஸவம்: [பை. ர.]

அளவு:— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ்.

உபயோகம்:—வெள்ளை மேஹம், மஞ்சம் மேஹம் (சீழ் மேஹம்), சுக்ர தோஷம், பிரமேஹம், நீர்சுருக்கு, ஸ்திரீகளுடைய கர்ப்பாசய வியாதிகள் முதலியவை நிவ்ருத்தியாகும். இதையே ஸ்வர்ண வங்கத்துடனும் உபயோகிக்கலாம்.

விலை 4 அவு. அ 10 1 பவுன் ரூ. 2

## சந்ததிஹ்ருதி தைலம்: (மஹா).

அளவு:—15 முதல் 30 துளி.

உபயேகம்:—இதை உள்ளுக்குச் சாப்பிடலாம். மூர்ச்சை அபஸ்மாரம், க்ஷயம், இரத்தகாஸம் முதலியவற்றில் உபயோகமானது.

விலை 4 அவு. ரூ. 2 1 பவுன் ரூ. 7.



வெளிப்படும். இப்படி சிலைகளை பிளந்துக் கொண்டு மேலே வருவதால் இதற்கு சிலாஜித்து என்னும் ஸார்த்தகமான பெயர் உண்டாயிற்று.

**வெவ்வேறு நிலைமைகளும், ஸ்வநுபவிஞ்ஞானமும்:**—பொன்னிலிருந்து உற்பத்தியாகும் சிலாஜித்து ஜபாபுஷ்பம்போல் சிகப்பாயும், கசப்புச்சுவையை அனுரஸமாய்க் கொண்டுள்ள இனிப்புச்சுவையுடன் கூடியதாயும் சீதவீரிய முள்ளதுமாயும் ச்லேஷ்ம பித்தங்களில் உபயோகிக்கத் தக்கதாயும் இருக்கும்.

**வெள்ளியிலிருந்து உற்பத்தியானது:**—இதுவே கர்பூரசிலாஜித்து. வெள்ளியினுடைய ஸாரமாகையால் கர்பூரத்தின் நிறமுள்ளதாய் மணல்போலிருக்கும். சீதவீரிய முள்ளது. சரீரத்திலுள்ள (அதிகமான) உஷ்ணத்தையும் சுக்ர நஷ்டம் முதலியவைகளையும் போக்கடிப்பதில் நிகரற்றது.

**செம்பிலிருந்து உற்பத்தியானது:**—மயில் கழுத்தைப்போன்ற காந்தியுள்ளதாய் கைப்புச்சுவையும் உஷ்ணமுமுள்ளதாயும் கடுபாக (பாகத்தில் கார) முள்ளதாயும் கபநோய்களை நாசனம் செய்யத்தக்கதாயு மிருக்கும்.

**இரும்பிலிருந்து உற்பத்தியானது:**—இது குக்குலு (குங்லியம்) போல் கருப்பாயும் கைப்புள்ளதாயும் லவணானுரஸமுள்ளதாயும் கடுவிபாகமுள்ளதும் சீதவீரியமுள்ளதுமாயும் திரிதோஷ ஹரமாயும் கோமூத்திரத்தின் மணமுள்ளதாயும் இருக்கும். ஆகையால் இதற்கு கோமூத்திர சிலாஜித்தென்னும் பெயர் உண்டாகி மிகவும் சுபிரசித்தமாயுளது.

**ஆராய்ச்சி:**—தற்காலம் பொன், செம்பு இவைகளிலிருந்து உற்பத்தியாகும் சிலாஜித்து வழக்கத்திலில்லாமல் தேடத்தக்கதாயுளது. வெள்ளி, இரும்பு இவைகளிலிருந்து உற்பத்தியானவை யிரண்டும் கர்பூரசிலாஜித்து, கோமூத்திர சிலாஜித்து என்னும் பெயர்களால் வழங்கப்பட்டு உபயோகத்திலிருக்கிறன. கர்பூரத்தை போலிருப்பதால் கர்பூரசிலாஜித்தென்றும் கோமூத்திரத்தை யொற்றிருப்பதால் கோமூத்திர சிலாஜித்தென்றும் பெயர்கள் உண்டாகியிருத்தல் சரியானதாகும். இவைகளில் கர்பூரசிலாஜித்து அரிதாயிருக்கின்றது.

**ரசாயன சக்தி:**—சிலாஜித்தில் ரசாயன சக்தி அதிகமாயுள தென்று சாகர் ஸுச்ருதர் முதலிய ப்ராசீன ஆசாரியர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். மற்றும் இது அவர்களுடைய பெரும் ப்ரீதிக்குப் பாத்திரமாய் அனேக நோய்களில் நிகரற்ற குணமளித்திருப்பதாகத் தெளிவாய் விளங்குகின்றது. வாத பித்த கபங்களை போக்கும்படியான மூலிகைகளுடைய சாற்றில் பலதடவை பாவனைசெய்த சிலாஜித்தை பாலோடு உட்கொண்டால் கிழத்தனத்தை நாசனம் செய்வதோடு நீண்டாயுளையும் தேகதார்ட்யத்தையும் மேதாசக்தியையும் ஸ்மிருதி (ஞாபக) சக்தியையும் கொடுக்கு மென்று சாகத்தில் மொழியப்பட்டுள்ளது.

**வர்க்பட அபிப்பிராயம்:**—சிலாஜித்தினுடைய உபயோகத்தால் சாந்தியடையாத நோய் மற்றெதற்கும் சாத்தியமாகாதென்றும், வேங்கையினுடையவும் கருங்காலியினுடையவும் கஷாயத்தில் பாவனைசெய்த சிலாஜித்து மதுமேஹத்தில் நிகரில்லாத வேலை செய்யுமென்றும் வாக்படத்தில் உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**பஸவராஜீயம்:**—இது காமாலைநோயைத் தீர்த்தல், அம்லபித்த நோயைப் போக்கடித்தல், கிருமிகளை நாசம்செய்தல், உன்மாதத்தை குணப்படுத்தல், ப்லீஹஜ்வரங்களை சம்ஹரித்தல், இவை முதலிய குணங்களுள்ளதென்று கூறப்பட்டுள்ளது.

**அசுத்தமான சிலாஜித்து:**—அசுத்தமான சிலாஜித்து மூர்ச்சையையும், பிரமத்தையும், இரத்த பித்தத்தையும், அக்கினி மாந்தியத்தையும், மலபந்தத்தையும் உண்டாக்கும் ஆதலால் அவ்விஷயத்தில் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டிருக்கத்தகும்.

**சிலாஜித்தின் பரீக்ஷைக்கிரமம்:**—சிலாஜித்தை நெருப்பில்வைத்தும் தண்ணீரில் போட்டும் பரீக்ஷிக்கவேண்டும். நெருப்பில் வைத்த

பொழுது புகைகிளம்பாமல் சிலாஜித்து கெடாமல் இருந்தாலும், ஜலத்தில் போட்டால் ஜலம் சிலாஜித்திற்கு ஒட்டாமலிருந்தாலும் அது சிலாஜித்தென்று எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

**கோமூத்திரசிலாஜித்தின் சுத்தி:**—கரிசலாங்கண்ணிச்சாறு, த்ரிபலைகஷாயம், தசமூல கஷாயம் இவைகளில் வகையறிந்து பாவனைகளைச் செய்தால் சுத்தமாகும். சிலாஜித்தின் பிரயோகத்தைக்காட்டும் ஒவ்வோர் ஔஷதத்திலும் இப்படிச்செய்ததை உபயோகிக்க வேண்டுமென்றி தேசீயர்கள் சாமானியமாக கர்பூரசிலாஜித்தென்று உபயோகிக்கும் வெண்மைநிறமுள்ள கல்லை உபயோகிக்கலாகாது.

**கர்பூரசிலாஜித் தென்னும் பிரமம்:**—நம்முடைய நாட்டில் இப்பொழுது வெண்மைநிறமுள்ளதும் கண்ணடியைப்போல் பலகை பலகையர்யுள்ளதுமான மிருதுவான கோலமிடும் மாக்கல்லு கர்பூரசிலாஜித் தென்னும் பெயரால் வழங்கப்பட்டும் உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டு மிருக்கின்றது. இது பார்ப்பதற்கு வெண்மையையுள்ள தேயல்லால் வெள்ளியினுடைய ஸாரம் எம்மாத்திரமும் இதில் காணப்படுவதில்லை. ஆயினும் இதின்பஸ்மம் மூத்திர கிருச்சிரங்களிலும், பூய(கனேரியா) மேஹங்களிலும் உஷ்ணத்தை சமனம் செய்தல் முதலிய நல்ல குணத்தை கொடுத்துக்கொண்டேயிருக்கின்றது. நல்ல சோற்றுக்கத்தாழை ரசத்தினுல் பஸ்மம் செய்யப்பட்டால் இம் மருந்து பயன் தருவதாகிறது.

**சிலாஜித்திற்கு நிஷித்தமான வஸ்துக்கள்:**—கொள் இயற்கையாக கற்களைப் பிளக்கும் பிரபாவமுள்ளதா யிருக்கின்றது. சிலாஜித்து கற்களுடைய ஸாரமாக யிருப்பதாகையால் இதை உபயோகிக்கும் பொழுது கொள்ளை உபயோகித்தால் இப்பெரும் ஔஷதமானது குணமற்றதாகும். ஆகையால் கொள்ளையும் கொள்ளைப்போன்ற குணமுள்ள மற்ற வஸ்துக்களையும் உபயோகிக்கலாகாது.

---

# வியாதிகளின் குறிப்பு

க்ஷயம் (ராஜயக்ஷ்மா):-Consumption

**விவரணம்:**—சாம்பல் நிறமான சிறிய ஜீவாணுக்களால் உண்டாகும் வீக்கத்தோடு கூடிய வியாதி.

**காரணங்கள்:**—ஜீவாணுக்கள் உடம்பில் வந்து சேருவது, பரம்பரையால் வருவது, போஷணைக் குறைவால் வருவது, சுகாதாரக் கெடுதி, தேகப்பயிற்சியின்மையாலும் பரிசுத்தமான காற்றின்மையாலும், தூசு துரும்பு சுவாசவழியால் உட்சென்று வருத்தத்தை உண்டாக்குவதாலும், சதுப்பு நிலத்தில் வாசம் செய்து அதனாலுண்டாகும் குளிர்ச்சியுமே இவ்வியாதிக்கு முக்கிய காரணங்களாகும். அம்மை, கக்குவான் இருமல், பரங்கிரோகம், மதுமூத்திர ரோகம், சுவாசக் கருவிகளைப் பற்றிய இதர ரோகங்களினுலும் இது உண்டாகலாம். இவ்வியாதி அதிகமாய் குழந்தைகளுக்கும், மத்தியவயதுள்ள வருக்கும் உண்டாகும். இது முதியவயதிலுண்டாவதரிது. இது தொடர்ந்தாவது விட்டு விட்டாவது வரும்.

பொதுவாய் இவ்வியாதி உடம்பிலுள்ள வழவழப்பான தசைநார்களைப் பீடிக்கிறது. ரக்த்த மணிகள் நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், மூத்திரக் குண்டிக்காய், சர்மம், எலும்பு இவைகளிலும் இவ்வியாதி இருதயம், உமிழ் நீர்க்கோளம், பாற்கோளம், சுக்கிர மணிகள், தைராயிட் கோளம், சுனை முதலிய இம்மாமிச பேசிகளை அணுகுவது அரிது.

**அறிகுறிகள்:**—காலையில் படுக்கையை விட்டு எழுந்த உடன் துன்பத்தைத் தரக் கூடிய வரட்டிருமல் உண்டாகும். பிணியாளிபடிகளை ஏறுவதற்கும், வேகமாய்ச் சிறிது தூரம் நடப்பதற்கும் மிகவும் வருத்தப்படுவான். லகுவான வேலை செய்தாலும் களைப்புமேலிடும். சிறிது காலத்தில் தேகம் இளைக்க ஆரம்பிக்கும். சாயங்காலத்தில் தேக உஷ்ணமும், அதிகமான நாடிநடையும் காணப்படும். அதிகமாய் மூச்சு அடிக்கடி வேகத்தோடுவரும். காலையில்



தேக உஷ்ணம் குறையும். மலபந்தம் உண்டாகும். கோழை அதிகரிக்கும். ஆகார வஸ்துக்களில் அருவருப்பும், பசியின்மையும் உண்டாகும். இது வியாதியின் முதல் நிலைமையாகும். பிணியாளிக்கு அதிக ஜாக்கிரதையாய் வைத்தியம் செய்தால் பிழைப்பான். இல்லா விட்டால் இரண்டாவது நிலைமைக்கு வியாதி விருத்தியாகும். இருமல் அதிகமாய் மஞ்சள் நிறமான கோழையோடு ரக்தம் கலந்து வெளிவரும். சுரம் அதிகரிக்கும். தோளிலும் காரை எலும்புகளுக்கு அடியிலும் வலிகாணும். பிணியாளியின் தேகம் அதிகமாய்க் க்ஷீணித்து இரவில் எண்ணெய்ப் பசையோடு கூடிய வியர்வை தோன்றும். பேதியும் வாந்தியும் உண்டாகும். இந்நிலைமையில் வியாதி குணமடையும் தருவாயிலிருந்தால் வியாதிகளின் அறிகுறிகள் படிப்படியாய்க் குறையும். இல்லையேல் மூன்றாம் நிலைமைக்குப் போகும். இந்நிலைமையில் ரக்தம் வாந்தியாக வாயினும் வேறு எந்த வழியாகவாயினும் அதிகமாய் வெளிவரும். இதர அவயவங்கள் கெடுதியை அடையும். கோழை பச்சை நிறத்தோடும் கெட்ட நாற்றத்தோடும் வெளிவரும். நுரையீரல் இரண்டும் கெடுதி அடையும். கெடுதியடைந்த விடங்களைத் தாடனம் செய்து பார்த்தால் மந்தமான ஒலிகேட்கும். முதல் நிலைமையில் சப்தவேணு இயந்திரத்கால் பார்த்தால் வரண்ட சப்தம் கேட்கும். இரண்டாம் நிலைமையில் நுரையீரலில் துவாரம் ஏற்பட்டதின்பேரில் 'கொர கொர' என்னும் சப்தம் கேட்கிறது, மூன்றாம் நிலைமையில் உடைந்த பாத்திர சப்தமும் கேட்கும். வியாதியின் விருத்தியில் மண்ணீரல், கல்லீரல், வயிறு, ஆகாரக் குழால், சப்தபெட்டி முதலிய மற்ற உறுப்புகளும் கெடுதி யடைகின்றன.

---

ஸித்த மகரத்வஜம்.

ஆயுர்வேத ஔஷதங்களில் மிகப் பிரஸித்தமான
பலவர்த்தக மருந்து. புத்தியை விருத்தி செய்யும்.
ஆயுளை அதிகப்படுத்தும். தாதுபுஷ்டியைத்தரும்.
மேஹரோகங்கள், க்ஷயம், காஸம், இரத்ததோஷம்,
வாதரோகங்கள், முதலிய அநேக வியாதிகளில்
வெகு உபயோகமானது.

விலை 25 மாத்திரை புட்டி ரூ. 5.

ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்.
43, ஹாரிஸ் ரோட்டு, மவுண்டு ரோட்டு, மதருஸ்.

# இயற்கை சிகித்ஸை.

நாற்புறமும் சூழ்ந்துள்ள ஆரண்யங்களுக்கிடையில் அமர்ந்திருக்கும் இத்தோட்டத்தின் இயற்கையான உன்னத ஸ்தானமும், மிருதுவான மணல் பூமியும், பசுமையான புல் தரையும், எவ்வேளையிலும் குளிர்ச்சிதரும் நிழலும் எங்களது ஆவடி ஆரோக்கிய ஆச்ரமத்தை ஓர் ஆரோக்கிய வாசஸ் தலத்திற்குத் தகுதியாக ஆக்குகின்றன.



"நம்முடைய முன்னோர்கள் நல்லகாற்று வீசும் இடங்களில் வசித்தனர்; நம்ரிஷிகளும் வனங்களையே விரும்பினர்; அங்கேயே குடியிருந்தனர்; அவ்விடங்களிலேயே மகா நாடுகளைக் கூட்டினர்; பாடசாலைகளையும் ஏற்படுத்தினர். இது போன்ற ஆச்ரமங்கள் நம்மை மீண்டும் இயற்கை வாழ்வை அடையச்செய்ய ஹேதுவாயிருக்கின்றன. தற்கால நாகரீகம் முதிர்ந்தவர்கள் இத்தகைய வாழ்வுதான் அவசியமென்று வற்புறுத்துகின்றனர்":—டாக்டர் முத்து

## ஆரோக்ய ஆச்ரமம்.

ஹகீம் நகர், ஆவடி, M. S. M. Ry.



# எங்களது முக்கியமான ஔஷதங்கள்.

## ஆனந்தபைரவ மாத்திரை

உபயோகம் :—இருமல், ச்வாஸம், அதிஸாரம் அஜீர்ணம் பிரமேஹம் மற்றும் மூத்திர வியாதிகள் முதலிய வற்றில் உபயோகமானது. அதிஸாரத்தில் தேனுடனும், காஸ ச்வாஸங்களில் ஆடாதொடையின் ஸ்வரஸத்தோடும், மேஹரோகங்களில் பசுவின் வெண்ணெயோடும் உபயோகிக்கலாம். ஜ்வரங்களில் இது மிகவும் பலன் தரத்தக்கது; இஞ்சி ஸ்வாஸம் அனுபானம்.

விலை 50 மாத்திரை புட்டி அ. 10.

## சீதாம்சுரஸம்

உபயோகம்:—குளிர் ஜ்வரத்தைப் போக்கும். வேறுவித ஜ்வரங்களிலும் இதைக் கொடுக்கலாம். விஸர்ப்பம் என்கிற அக்கி, இதர சர்மதோஷங்கள், தேள் முதலிய விஷஜந்துக்கள் தீண்டுவதாலுண்டாகும் தொந்தரவு முதலியவற்றிலும் உபயோகிக்கக் கூடியது. பஞ்சதிக்த கஷாயம், வேப்பம் பட்டைக் கஷாயம் முதயலிவை அனுபானம். நொச்சியிலைச் சாற்றுடன் அபஸ்மாரத்தில் (காக்கை வலி) உபயோகிக்கலாம்.

விலை 50 மாத்திரை புட்டி அ. 10.

## பஞ்சதிக்த பானகம்

உபயோகம் :—முறைக் காய்ச்சல், குளிர்ஜ்வரம், பித்தஜ்வரம் முதலிய அநேக ஜ்வரங்களில் வெகு உபயோகமான ஔஷதம். இதில் இரண்டு அல்லது மூன்று பங்கு ஜலம் சேர்த்து உபயோகிக்கவும்.

விலை 1 பவுன் ரூ. [illegible]

## ஸுதர்சன சூர்ணம்

உபயோகம் :—குளிர்காய்ச்சல், பித்தஜ்வரம், மற்றும் பலவிதமான ஸந்நிபாதாதி ஜ்வரங்கள் முதலியவற்றை நிவாரணம் செய்ய வல்லது. வெந்நீர் அனுபானம். மேலும் இச்சூர்ணத்தைத் தேங்காயெண்ணை அல்லது நல்லெண்ணையோடு கலந்து மேலே சர்மத்தில் தேய்த்துக்கொண்டு ஊறினபின் சந்தனாதிஸ்நான சூர்ணம் போட்டுத் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் சொறி சிரங்கு முதலிய சர்ம ரோகங்கள் தீரும்.

விலை 4 அவு. அ. 8 1 பவுன் ரூ. 1-8-0.

## ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்.

43, ஹாரிஸ் ரோட், மவுண்டு ரோட்டு, மதராஸ்.

## எங்களது முக்கியமான ஔஷதங்கள்.

### அச்வகந்தாதி லேஹ்யம்.

உபயோகம் :—வெகு உத்தமமான பல வர்த்தக ஔஷதம். இரத்த சுத்தி செய்வதிற் சிறந்தது. தேஹம் இளைத்திருப்பவருக்கும், மூளை பலஹீனமாயிருப்பவருக்கும், வாதரோகத்தினால் வருந்துபவருக்கும் உபயோகமானது.

விலை 4 அவுன்ஸ் ரூ. 1. 1 பவுன் ரூ. 3.

### திராக்ஷாரிஷ்டம்.

உபயோகம் :—க்ஷயம், காஸம், இரத்தகாஸம், துர்பலம் முதலியவற்றில் வெகு உபயோகமானது. இருதயத்திற்கு பலம்தரும். சிறந்த உத்தீபனகாரி. உத்ஸாஹத்தை விருத்திசெய்யும். சிறிது ஜலம் விளாவி உபயோகிக்கவும்.

விலை 4 அவு அ. 10. 1 பவுன் ரூ. 2.

### பிருங்காமலக தைலம்.

இதை தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்வதாலும், மூக்கிற்குள் நஸ்யமாக உபயோகிப்பதாலும் தலைநோய்கள், கண்ணோய்கள் காக்கைவலி, காதுகுத்தல், வெறி, கபக்கோளாறுகள் முதலிய நோய்களைப் போக்கி தலைமயிருக்கு கருநிறத்தை யுண்டாக்கும். மேலும் கண்களை குளிரச் செய்யும், மயிரை நன்றாக வளரச் செய்யும். நரைத்தமயிரையும் கருக்கச் செய்யும்.

விலை 4 அவு. ரூ. 1. 1 பவுன் ரூ. 3.

### பாஸ்கரலவண சூர்ணம்.

உபயோகம்:—எவ்விதமான அஜீர்ணத்திற்கும் இது மிகவும் உபயோகமான உப்பு. வயிற்றுவலி, பசியின்மை, வயிற்றில் புளிப்பு அதிகரித்தல், மார்பு எரிவு, மலபந்தம், குல்மம், காமாலை முதலிய கோளாறுகளை நிவாரணம் செய்யும். வெந்நீர் அல்லது நீர்மோர் அனுபானம்.

விலை 4 அவு. அ. 10. 1 பவுன் ரூ. 2.

## ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்.

43, ஹாரிஸ் ரோட், மவுண்டு ரோட்டு, மதராஸ்.


Pages missing 13 TO 44



**செய்கை:**—உள்ளுக்குக் கொடுக்க உற்சாக காரி, சிறியளவில் மூத்திரவர்த்தனி, க்ஷீரவர்த்தனி, ருதுவர்த்தனி, குடல் தாதுக்ஷீணரோதிகாரி, கபகாரி, விஷஜ்வரகாரி, காசகாரி, வியதாபேதகாரி, கிருமிநாசனி வீரியவர்த்தனி ரசாயனி வெளிப்பிரயோகத்தில் தாது க்ஷீணரோதி சிவப்பையும் கொப்பளத்தையும் உண்டாக்கி எரிச்சல் இருக்கும் பக்கத்தில் எரிச்சலைத் தணிக்கும். அதிக அளவில் உபயோகித்தால் வயிற்று உப்பிசத்தையும் தலைவலியையும் பீனி சத்தையும், வமனத்தையும், கிரகணியையும் உண்டாக்கும்.

**உபயோகம்** :—வெள்ளுள்ளி வாத வியாதிகளில் உற்சாக காரியாக உபயோகப்படுகிறது. இது அநேக விதமான வியாதிகளில் உபயோகப் படுகிறது. காதுவலியில் இந்தச் சரக்கோடு பெருங்காயத்தைச் சேர்த்து எண்ணெய் காய்ச்சி சிறுது உஷ்ணமாக காதுகளில் விடப்படுகிறது (இங்குத் திருகுண தைலத்தைப்பார்க்க) ஓமம், மஞ்சள் முதலியவைகளோடு அரைத்து ஆமணெக் கெண்ணெய்விட்டு குளப்பி வெதுப்பிக் கட்ட வீக்கத்தைக் குறைக்கிறது. நிமோனியா, புளூரசீ முதலிய வியாதிகளில் மேல் பூச்சுப்போட நல்ல குணத்தைச் செய்திருக்கிறது. இதை கற்பூரம் மஞ்சள் இவைகளோடு சேர்த்து மூர்ச்சையாய் விழுந்து இருதய நடை தடைபட்டு உடம்பு சிலுத்த போது உடம்பின் மேல் தேய்க்கலாம். இதைச் சில வைத்தியர்கள் ஸ்திரீகள் பிரசவித்த பின் இரகசியமாகக் கொடுக்கிற சரக்கு. இதைச் சரியாக உபயோகித்தால் அநேக குணத்தைச் செய்யக் கூடிய அருமையான சரக்கு.

### 75. ரேவல் சின்னி.

**பெயர்கள்:**—லத்தின் கார்சினியா மொரில்லா.

| | |
|---|---|
| தமிழ் | ரேவல் சின்னி. |
| தெலுங்கு | ரேவல் சின்னி. |
| கன்னடம் | ரேவல் சின்னி. |
| மலையாளம் | ரேவல் சின்னி. |
| உருடு | ரேவல் சின்னி. |

**அளவு:**—3 முதல் 10 தானிய எடையுள்ள பொடியை தேனோடாவது வெந்நீரோடாவது கொடுக்க.

**செய்கை:**—விரேசனி.

**உபயோகம்:**—இது விரேசனி குளிகையாகவாவது தூளாகவாவது கொடுக்கப்படுகிறது. இது வயிற்றுவலியை உண்டாக்கக் கூடிய தாகையால் இதர உதரகர காரிகளோடு கொடுக்கப்படுகிறது. இது குழந்தைகளுக்கு பாலோடும் ஓம நீரோடும் கொடுக்கப்படுகிறது. இது நம் முடைய ரேசன வடியில் சேர்ந்திருக்கிறது. (ரேசன வடியைப் பார்க்க).

### 76 ஸைந்தவலவணம்.

**பெயர்கள்** :—லத்தின் ராக்சால்ட்.

| | |
|---|---|
| தமிழ் | இந்துப்பு. |
| தெலுங்கு | சைந்தவ லவணமு. |
| கன்னடம் | இந்துப்பு. |
| மலையாளம் | இந்துப்பு. |
| உருடு | சோனு நமக். |

**அளவு:**—10 முதல் 30 தானிய எடையை தீபன காரியாகவும் 120 முதல் 240 தானிய எடையை வமன காரியாகவும் உபயோகிக்கலாம்.

**செய்கை** :—“ விருஷ்யம் சக்ஷுஷ்யம் ருச்யம் தீபனம் திரிதோஷக்னம் பூத வ்ரண விபந்த விக்னம்-ராஜ நிகண்டு ம்ருது சீதவீரியத்வாத் பித்தஹரம்”.

(சுசுருத சூத்திர அத்தியாயம் 40).

சமுத்திர உப்பைக் காட்டிலும் சீதள காரி தீபன காரி சேமிக்கும் குணம் உடையது தாது க்ஷீணரோதி காரி.

**உபயோகம்:**-இது எல்லா மருந்துகளோடும் கூடி உதர வாதகர காரியாகவும் பசி தீபனகாரியாகவும் உபயோகப்படுகிறது. கெட்ட புண்களுக்கும் சுத்தி செய்யும் திராவகமாக வெளியில் உபயோகிக்கப்படுகிறது.

**77.** சால்மலீ.

**பெயர்கள்:**—லத்தின் பம்பாக்ஸ் மலபாரிகம்.

| | |
|---|---|
| தமிழ் | இலவு. |
| தெலுங்கு | பூருக. |
| கன்னடம் | பூருக. |
| மலையாளம் | இலவு. |
| உருது | கீகார். |

அளவு:—5 முதல் 15 தானிய எடையுள்ள பிசினை நெய்யோடும் சர்க்கரையோடும் தண்ணீரோடும் தேனோடும் உபயோகிக்கலாம்.

**செய்கை:**—வழுவழுப்பை உண்டாக்கும் வியதாபேத காரி சங்கோசன காரி வீரிய வர்த்தனி.

**உபயோகம்:**—இதை ரத்த பித்தத்தில் உள்ளும் புறமும் உபயோகிக்க வேண்டும். வெட்டுக்காயத்தில் முதலில் தூவிக்கட்ட ஆற்றும். இது 2 வரம்புகளையும் ஊசியால் தைத்ததைப் போல பிணைத்து ஆற்றுகிறது. ஆகையினால் இது புண்களை கட்டுவதற்கு அநுகூலமானது. இதை நெய்யோடாவது எண்ணெய்யோடாவது கூட்டி தாதுக்ஷீணரோதி காரி சங்கோசனகாரியான களிம்பு ஆக கர்ப்ப ஸ்திரீகளுக்கு உபயோகப்படுகிறது. கர்ப்ப சிராவகத்தில் உண்டாகும் ரத்தத்தை நிறுத்துவதற்கு இது உபயோகப்படுகிறது. ரக்த பேதியிலும் கிரகணியிலும் இது பொதுவாய் உபயோகப்படுகிறது. இது சமனகாரியான சங்கோசன காரி இது வயிற்றுப் போக்கை நிறுத்துகிறது. ஆனால் இது அபினியைப் போல் புத்தி மயக்கத்தையாவது மூர்த்திர அடைப்பையாவது செய்வது இல்லை. இது ருதுவை தடுப்பதில் மிகவும் உபயோகப்படுகிறது. ஆனால் இதை அந்தபாகங்களில் வீங்கியிருக்கும் போது உபயோகப்படுத்துகிறார்கள். இது தாது விர்த்தியில் உபயோகப்படுகிறது. இதன் புஷ்பங்களை பிரதர என்ற பெரும்பாடிலும் பிலீகாவிரித்தியிலும் உபயோகிக்கும்படி பாவப் பிரகாசத்தில் சொல்லப்படுகிறது.

**78.** சாரிபா.

**பெயர்கள்:**—லத்தின் ஹெமிடெஸ் மஸ்இன் [டிசஸ்.

| | |
|---|---|
| தமிழ் | நன்னாரி. |
| தெலுங்கு | சுகந்திபலா. |
| கன்னடம் | சுகந்தி. |
| மலையாளம் | நன்னாரி. |
| உருது | நன்னாரி. |

அளவு:—10 முதல் 60 தானிய எடை சூரணமாகவும் கால் முதல் அரைத் தோலாவை கஷாயமாகவும் வெந்நீர் ஊறல் கஷாயமாக ஒரு அவுன்சை 1 பைண்ட் ஜலத்தில் வெந்நீர் ஊறல் செய்து சர்க்கரை கலந்து பானகமாகவும் இதன் பானகம் அரை முதல் 2 அவுன்சு 1 டம்ளர் ஜலத்தில் போட்டு உட்கொள்ளவும்.

**செய்கை :**—உஷ்ணத்தை தணிக்கும் உபயோககரமான வியதாபேத காரி, சுவேத காரி, மூர்த்திர வர்த்தனி, ரத்தசுத்தி ரசாயனி, வீரிய விர்த்தனி, என்று பாவப்பிரகாஸத்தில் லப்படுகிறது.



**உபயோகம்:**—இதன் சூர்ணம் சர்க்கரையோடும் நெய்யோடும் பித்த விகாரங்களிலும் நாள் பட்ட பரங்கி ரோகங்களிலும் சீழ்பிரமேகத்திலும் உஷ்ணத்திலும் மூர்த்திரதாரை எரிவிலும் உபயோகப்படுகிறது. குழந்தைகளின் கணையிலும் மெல்லிய ஸ்திரீகளுக்கு அபஸ்மாரத்திலும் இடைவிடாமல் நெடுநாள் சாப்பிட்டால் குணம் தரும் என்று சரகர் சொல்லுகிறார். இது வேனிற் காலத்தில் உபயோகப்படும் சிறந்த ரசாயனி, குஷ்டம் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளில் சுகந்த லேகியமாக உபயோகப்படுகிறது. சிரங்கு படர்தாமரை முதலிய வியாதிகளில் நெய்யோடு கூட்டி மேலுக்குத் தடவலாம்.

**79.** சர்க்கரா.

**பெயர்கள்:**—லத்தின் சுகர்.

| | |
|---|---|
| தமிழ் | சர்க்கரை. |
| தெலுங்கு | சர்க்கரா. |
| கன்னடம் | சர்க்கரை. |
| மலையாளம் | பஞ்ச சாரை. |
| உருது | சக்கர். |

அளவு:—அரை முதல் 1 தோலா நெய்யோடும் ஏலத்தைக் கூட்டிய ஒரு கோப்பை ஜலத்தோடும் லேகியங்களிலும் பானகங்களோடும் ஆசவங்களோடும் கொடுக்கப்படுகிறது.

**செய்கை:**—உஷ்ணத்தைத் தணிக்கும் வீரிய விர்த்தி ரசாயனி.

**உபயோகம்:**-ஆயுர் வேதத்தில் இனிப்பு பண்டங்களெல்லாம் பிரம்மணம் பலத்தைக் கொடுக்கக் கூடியன அவைகளில் முக்கியமானது இது. உஷ்ணத்தை குறைக்கக் கூடியது ஆகையினால் இது எல்லா பித்த வியாதிகளில் அநுபானமாகக் கொடுக்கப்படுகிறது. நெய்யும் சர்க்கரையும், பாலும் நெய்யும் சர்க்கரை பால், அதிம்துர தேன், இவைகள் விருஷியம் வீரியத்தை உண்டாக்கக் கூடியன. இவை ஒவ்வொன்றும் தனித் தனியாகவாகிலும் கூட்டியாகிலும் அடிக்கடி உபயோகப்படுகிறது. பூனைக்காஞ்சூரி, முருங்கை, கரும்பு, அமுக்கிரான் தண்ணீர் விட்டான இவைகள் ஒவ்வொன்றும் சர்க்கரையோடு வீரிய விர்த்திக்கு உபயோகப்படுகிறது. வெளிப் பிரயோகத்தில் தண்ணீரோடு கலந்த இதனுடைய சத்து தாது க்ஷீணரோதியாக வெட்டுக்காயங்களில் உபயோகப்படுகிறது.

**80.** சதாவரி.

**பெயர்கள்:**—லத்தின் அஸ்பரேகஸ் ரேசிமோசஸ்.

| | |
|---|---|
| தமிழ் | தண்ணி முட்டான் [கிழங்கு. |
| தெலுங்கு | பில்லி பீச்சர. |
| கன்னடம் | ஹலவுமக்களதாயி [பேரு. |
| மலையாளம் | சதாவரி கிழங்கு. |
| உருது | சுபிட் மூஸ்லி |

**அளவு:**—10 முதல் 60 தானிய எடை உள்ள பொடியை நெய்யோடாவது சர்க்கரையோடாவது பாலோடாவது பாலும் தேனோடாவது உட்கொள்ள இன்னும் வீரிய விர்த்தி சரக்குகளோடு சூரணமாக வேனும் லேகியமாக வேனும் கால் முதல் அரை அவுன்சு சுவரசத்தை சர்க்கரையோடாவது நெய்யும் சர்க்கரையோடாவது உட்கொள்ள.

**செய்கை:**—வெப்பத்தைத் தணிக்கும் க்ஷீரவர்த்தினி வீரிய வர்த்தினி போஷணை உண்டாக்கக் கூடியது.

**உபயோகம்:**—இது போஷணை செய்யும் ரசாயனியாக லேகியங்களிலும் நெய்களிலும் உபயோகிக்கப்படுகிறது.

இதுநெருஞ்சிலோடு சேர்த்துக் கஷாயமாக மூத்திரவர்த்தனி, சமன காரியாகவும் உபயோகிக்கப்படுகிறது. இதை ரக்தா அதிசாரத்தில் பாலோடு கொடுக்கப்பட்டு பாலும் சாதம் கொடுக்கும்படி சரகர் சொல்லுகிறார். அபஸ்மாரத்தில் இதை உபயோகப் படுத்தலாம். இச்சரக்கை பாலோடு ...தத்துக்காய்ச்சி ரக்த பித்தத்தில் கொடுக்கலாம். இதை மூத்திர மார்க்கத்தில் ரக்தம் விழுந்தால் அதற்குக் கொடுக்கலாம். இது எல்லா வியாதிகளிலும் ரசாயனி.

**81.** சோண்டி

**பெயர்கள்:**—லத்தின் ஜின்ஜிபர் ஆபீசினேல்.
தமிழ் சுக்கு.
தெலுங்கு சொண்டி.
கன்னடம் சுத்தி.
மலையாளம் சுக்கு.
உருடு சோண்ட்.

அளவு:— 5 முதல் 30 தானிய எடையுள்ள சூரணத்தை உஷ்ண ஜலத்தோடாவது வெல்லத்தோடு கலக்கியாவது உருண்டைகளை ஆக்கியாவது பானகமாகவாவது உபயோகிக்கலாம். வென்னீர் ஊரல் கஷாயமாவது போட்டு உபயோகிக்கலாம். இதர சரக்குகளோடு சேர்த்து லேகியமாக உபயோகிக்கலாம். (சௌபாக்கிய சொன்டி) இஞ்சியை மேற் சொன்ன பிரகாரமே உபயோகிக்கலாம்.

**செய்கை:**— உள்ளுக்கு உபயோகப்படுத்தினால் உற்சாககாரி, பசி தீபனகாரி உதரவாத ஹரகாரி, வெளியில் உபயோகப்படுத்தினால் கொப்பளிக்கச் செய்யும், சர்மத்தை சிவக்கச் செய்யும், வேதனா சாந்தகாரி. இஞ்சி:—சீதளகாரி, மூத்திரவர்த்தனி.

**உபயோகம்:**—இது உதரவாத காரியாக பித்தா சயத்தைப் பற்றிய வியாதிகளில் ஆரம்பத்தில் மிகவும் நல்ல பிரயோஜனத்தைக் கொடுக்கிறது. வயிறு உப்புசத்திலும் மூட்டு வாதங்களிலும் இதை ஆமணக்கு எண்ணெயோடு சேர்த்துக் கொடுக்க நல்ல பிரயோஜனத்தைக் கொடுக்கிறது இஞ்சி மூத்திரவர்த்தனி காரியாகவும் சுக்கு உதரவாத ஹரகாரியாகவும் மிகவும் நல்ல வேலையைச் செய்கின்றன. இஞ்சி குளிர்ச்சியைத் தரக்கூடியதும் சுக்கு உஷ்ணத்தைக் தரக்கூடியதுமாக நம்பப்படுகிறது. இஞ்சியின் ரசத்தோடு தேனைச் சேர்த்து அதிக அளவில் கொடுக்க விரேசனத்தை உண்டாக்கி வயிற்றில் நரம்புப்பிடிப்பைப் போக்குவதோடு மூத்திரத்தை அதிகப்படுத்தும். இஞ்சி அநேக வியாதிகளில் உபயோகப்படுகிறது. முக்கியமான வியாதிகளில் வயிற்றுவலி, கிரகணி, வயிற்றுப் பொருமல், அஜீரணம், பசியின்மை தொண்டை இருமல், சுவாசகாசம், இருதய வியாதி, கால்ரா, பீனசம், ருசியின்மை, சுரம் நரம்புகளைப்பற்றிய வியாதிகள், சுருங்கச் சொல்லில் எல்லா வியாதிகளையுங் கண்டிக்கக் கூடிய மருந்து என்பதால் விஸ்வ பேஷஜம் என்னும் பெயரும் மகா அவுடதம் என்றும் பெரும் வழங்குகிறது. வெளிப்பிரயோகத்தால் வலி, வீக்கம், தலைவலி பல்வலி இவைகளுக்குப் பற்றுப்போடலாம். இதைக் கலிக்யமாகிய மாகவும் நைசியமாகவும் தண்ணீரோடும் உப்போடும் சேர்த்து தலைப்பாரத்தைக் குறைப்பதற்கும் தலைவலியைக் குறைப்பதற்கும் சுரத்தில் மூளையைப் பற்றிய கெடுதிகளைக்



குறைப்பதற்கும், பயித்தியத்தைக் குறைப்பதற்கும், இசிவுகளைக் குறைப்பதற்கும் உபயோகப்படுகிறது. சுரத்தினால் உண்டாகிய கண்டக்கால் வலியை நீக்குவதற்கு இதை தண்ணீரோடு சேர்த்து கொதிக்க வைத்துப் பூசினால் உடனே கண்டிக்கிறது. கல்லீரல் வீக்கத்தில் இதை நவாச்சாரத்தோடு, தேவதாருவோடும் தண்ணீரால் ஆவது ஆட்டு யாட்டு மூத்திரத்திலாவது போட எல்லா வித வலிகளையும் இது கண்டிக்கிறது.

**82.** சுரசாரம்.

**பெயர்கள்:**—லத்தின் பொயாசியை நீட்ரஸ்.
தமிழ் வெடியுப்பு.
தெலுங்கு சுராகாரம்.
கன்னடம் சுராகார.
மலையாளம் வெடியுப்பு.
உருடு ஷோரா.

அளவு:— 5 முதல் 15 தானிய எடை

**செய்கை:**—மூத்திரவர்த்தனி, சுவேதகாரி சிறிய அளவில் சீதளகாரி, பெரியளவில் எரிச்சலை உண்டாக்கும். ஆஸ்துமாவில் இசிவுகளைத் தணிப்பதிலும் கெட்டவைகளை எரிப்பதிலும் உபயோகப்படுகிறது.

**உபயோகம்:**—இது இதர மருந்துச் சரக்குகளோடு சேர்த்து மூத்திரவர்த்தினியாகக் கொடுக்கப்படுகிறது. இதன் ஒன்றிரண்டு சிமிட்டாப் பொடியை எலிமிச்சப் பழச்சாற்றோடு கூடிய ஜலத்தில் கலக்கி கால்ராவில் மூத்திரத்தை உற்பத்தி செய்வதற்காக கொடுக்கப்படுகிறது. இது சங்கத்திராவகத்திலும் ஆஸ்துமா சுருட்டுகள் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. ஆஸ்தமா சுருட்டின் முக்கிய சரக்கு ஆடாதோடை ஊமத்தன், சுராசாரம் இதில் மையொட்டிக்காய்கிதத்தின் ஒரு துண்டைப்போட்டு நனைத்து உலரவைத்து கொளுத்திப் புகையை உருஞ்சினால் ஆஸ்துமாவில் உண்டாகும் இசிவுகள் தணியும்.

**83.** சோர்னமுகி.

**பெயர்கள்:**—லத்தின் காசியா சென்ன.
தமிழ் நிலாவரை.
தெலுங்கு சொன்னமுகி.
கன்னடம் சுன்னமுகி.
மலையாளம் சுன்னமுகி.
உருடு சொனா.

அளவு:— $\frac{1}{2}$ முதல் 2 தோலாவை கஷாயமாக வேணும் இதரச் சரக்குகளோடு கூட்டியாகிலும் உபயோகிக்கலாம். லேகியமாக கொத்தமல்லி சரக்கொன்றைப்புழி கற்கண்டு திராட்சை, ரோஜா இதழ் பன்னீர் தேன் வேண்டுமானால் கொஞ்சம் புளி சேர்த்துச் செய்யலாம். சிறப்பாகவும் கொடுக்கலாம்.

**செய்கை:**— விரேசனி.

**உபயோகம்:**— இது மலத்தை இளக்கி நல்ல பேதியை உண்டாக்கும். இதனுடைய முக்கிய கெடுதி. கெட்ட நாற்றத்தை உண்டாகும். இது மிகவும் உத்தமமான அபாயகரமில்லாத பேதிச்சரக்கு. முன்னே சொன்ன லேகியத்தால் இதனுடைய கெட்ட நாற்றத்தை ஒளிக்கலாம். இது மூத்திரத்தைச் சிவக்கச் செய்து சிலசமயங்களில் குறைக்கவும் கூடும்.

**84** தாளிச பத்திரி.

**பெயர்கள்:**—லத்தின் அபைஸ் வெப்பியான.
தமிழ் தாளிச பத்திரி.
தெலுங்கு தாளிச பத்திரி.
கன்னடம் தாளிச பத்தர.
மலையாளம் தாளிச பத்திரி.
உருடு தாளிஸ்பத்ரி, ஜருநாப்.

அளவு:—5 முதல் 15 தானிய எடையுள்ள பொடியை தேனோடாவது இதர இருமல் மருந்தோடாவது சேர்த்துக் கொடுக்கலாம். எட்டு பாக ஜலத்தோடு சேர்த்து நாலு பாகமாய்க் காய்ச்சி சிறிது தேனைக் கூட்டிக் கொடுக்கலாம்.

**செய்கை:**—இசிவுகளைத் தணிக்கும், உதரவாத ஹரகாரி, சுகந்தகாரி, லகு கபகாரி, ரத்த சுத்தி செய்யும்.

**உபயோகம்:**—இது நுரையீரலைச் செப்பனிடும் வேலையைச் செய்ய உத்தமச் சரக்கு. இது நாட்பட்ட இருமலிலும் காசத்திலும் கொடுக்கக்கூடிய உத்தமச் சரக்கு ஜலதோஷத்தையும் இருமலையும் போக்கக்கூடிய தாளிசாதி சூரணத்தில் இது கொஞ்சம் சேர்ந்திருக்கிறது. இது நல்ல பசிதீபனத்தையும் ருசியையும் உண்டாக்கும்சரக்கு. இது வாந்தியை நிறுத்தும். இதைச் சக்கரத்தர் தேனோடும் ஆடாதோடாக் கஷாயத்தோடு ரத்த பித்தத்துக்குக் கொடுக்கச் சொல்லுகிறார்.

## 85. டங்கணம்.

**பெயர்கள்:**—லத்தின் போராக்ஸ்.

தமிழ் வெங்காரம்.
தெலுங்கு வெலிகாரமு.
கன்னடம் பெலிகார.
மலையாளம் பொங்காரம்.
உருடு சுகய.

அளவு:—5 முதல் 30 தானிய எடை

**செய்கை:**—மூத்திரவர்த்தனி, மூத்ரமார்க்க தாது க்ஷீணரோதி, சங்கோசன காரி.

**உபயோகம்:**—இதைத் தனியாக அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை, ஆனால் இதர சரக்குகளோடு சேர்த்து உபயோகிக்கப்படுகிறது. இது மூத்திர விரேசனத்தை உண்டாக்கி மூத்திர தாரையிலுள்ள வீக்கத்தைக் குறைத்து மூத்திரத்தைச் சுத்தி செய்யும். ஆனந்தபைரவரசம் முதலிய சில சுரமாத்திரிரைகளில் சேர்க்கப்படுகிறது. இது குடல் தாது க்ஷீணரோதியாகவும் சங்கோசன காரியாக சீதரத்த பேதியில் உபயோகப்படுகிறது. இதை வெளியில் வாய் புண்களுக்கும் கண்களுக்கும் கழுவு மருந்தாக உபயோகப்படுத்தலாம். இதை காயங்களில் உண்டான வீக்கங்களுக்கு குளிர்ச்சி பொருந்திய சங்கோசன காரி கழுவு மருந்தாகவும் வாய் தொண்டை வியாதிகளில் வாய் கொப்பளிக்கும் மருந்தாகவும் சிறிது தேன் சேர்த்து உபயோகிக்கலாம். நாக்கு தொண்டைப் புண் முதலியவற்றில் இதை சிறிது தேன் நீரோடு சேர்த்தாவது, தேன் அதிமதுரத்தூளோடாவது சேர்த்து உபயோகிக்கலாம்.

## 86. தில தைலம்.

**பெயர்ள்:**—லத்தின் ஒலியம் சிசாமி.

தமிழ் நல்லெண்ணை.
தெலுங்கு மஞ்சி நூன.
கன்னடம் எள்ளெண்ணை.
மலையாளம் நல்எண்ணை.
உருடு மீட்ட தைல.

அளவு:—கால் முதல் அரை அவுன்சை போசன காரியாக உணவுகளோடு சேர்த்து உபயோகிக்கலாம் லகு விரேசனியாக பாலோடு சேர்த்து படுக்கைக்குப் போகுமுன் உபயோகிக்கலாம். சில பிள்ளைகளுக்கு சம எடையான விளக்கெண்ணையும் நெய்யையும் கூட்டிக் கொடுக்கிறார்கள். இது பித்த வர்த்தகம் மென்று நினைக்கப்படுகிறது. ஆனால் இதை பித்த வியாதியினால் துன்பப்



## 90. துவரக.

**பெயர்கள்:**—லத்தின் ஹிட்னொகார்பஸ் வைடியானா.

தமிழ் நீரடி முத்து.
தெலுங்கு நிருடு.
கன்னடம் சார்வோலு, துவரக.
மலையாளம் மரவட்டி.
உருடு ஜங்கலிபாதம்.

அளவு:—2 முதல் 10 மினிம் வரை எண்ணையை உள்ளுக்குக் கொடுக்கலாம். வெளிப்பிரயோகத்தில் எண்ணையாகவாகிலும் லேபமாகவாகிலும் உபயோகிக்கலாம்.

**செய்கை:**—ரக்த சுத்தி காரி, குஷ்டத்தைப் போக்கும், ரசாயனி.

**உபயோகம்:**-குஷ்டத்தில் இந்த எண்ணை உத்தம மருந்து சில குஷ்டங்களில் நல்ல பிரயோஜனத்தைக் கொடுக்கிறது. சில முதிர்ந்த வியாதிகளில் சரியாக வேலைசெய்கிறதாகத் தெரியவில்லை. இந்த எண்ணை குஷ்டம், க்ஷயம் முதலிய சர்ம வியாதிகளில் உடம்பின் மேல் நன்றாய்த் தேய்க்கப்பட வேண்டும். இது ரத்தத்தை பரிசுத்தமாக்கும். சொரிகளிலும், கிரந்திப்புண்களிலும், கணுக்கால் வாதத்திலும் இதை உள்ளும் புறமும் சேவிக்கலாம். இதை வேப்பெண்ணை யோடு சேர்த்து சேவிப்பது உத்தமம். இதைச் சேவிப்பதற்கு முன் பஞ்சகர்மாக்களைச் செய்து கொண்டு எண்ணையும் உப்பும் சேரா உணவை ஐந்து நாள் உட்கொண்டு பின் மறு பத்தியமாக அன்னமும் பச்சைப் பயர் நீரும் 15 நாள் உட்கொள்ள வேண்டுமென கூறப்பட்டிருக்கிறது.

## 91. உசீரம்.

**பெயர்கள்:**—லத்தின் அன்ட்ராபோகன் முரிகேட்டஸ்.

தமிழ் விளாமிச்சம் வேர்.
தெலுங்கு வெட்டி வேரு.
கன்னடம் லாவஞ்ச.
மலையாளம் ராமச்சம்.
உருடு பால.

அளவு:—5 முதல் 15 தானிய எடைவரை பொடியை சர்க்கரை யோடு அரை முதல் ஒரு தோலாவரை கஷாயமாக வேனும் வென்னீர் ஊரல் கஷாயாமக வேனும் அரைக்கால் தோலாவை ஒரு கோப்பை தண்ணீரோடு காய்ச்சி பாலையும் சர்கரையும் சேர்த்து பானகமாக வேனும் (சிரப்பாக வேனும்) இதர மருந்துகளுக்கு அனுபானமாக வேனும் கொடுக்கலாம்.

**செய்கை:**—சீதளகாரி, வியர்வையை அதிகமாக்கும், மூத்திரவர்த்தனி, இசிவுகளைத்தணிக்கும், ருது வர்த்தனி.

**உபயோகம்:**--ஜ்வரத்தின் தாபத்திலும், மாதவிடாய்க் கோளாருகளிலும், கணுக்கால் வாதத்திலும், திமிர் வாதத்திலும் இதரசரக்குகளோடுசேர்த்துக் கொடுக்கலாம். இது ஷடங்க கஷாயத்தில் முக்கிய சரக்கு (38-வது பக்கம் பார்க்க), குளிர்ச்சியைத் தருகிற ஸ்நான எண்ணையையும், பூச்சிகளைக் கொல்லுகிற சோப்புகளிலும் சுகந்தகாரியான ஸ்நானப்பொடிகளிலும், தலைவைகளிலும் இது உபயோகப்படுகிறது. இது கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் தட்டிகட்டுவதிலும், ஜலத்தை சீதளமாயும் பரிமளமாயும் வைத்திருப்பதற்கும் உபயோகப்படுகிறது. வெய்யிற்காலத்தில் இந்தத் தட்டிகளை நனைத்து விட்டு விட்டால் அந்த அரைகளை குளிர்ச்சி

யாக் வைத்திருக்கும். இது குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. இதை சீத கஷாயமாகச் செய்து உபயோகித்தால் நீர்த்தாரையில் உண்டாக்கும் எரிவுகளையும் குத்து குடைச்சல் வீக்கங்களையும் போக்கும்.

**92.** வசா.

**பெயர்கள்:**—லத்தின் அகோரஸ் கலமஸ்.
தமிழ் வசம்பு.
தெலுங்கு வஸ.
கன்னடம் பஜே.
மலேயாளம் வயம்பு.
உருடு பச்

அளவு:—5 முதல் 15 தானிய எடைவரை இதன் பொடியை தேனோடு கொடுக்கலாம்.

**செய்கை:**—உள்ளுக்குக் கொடுக்க கசப்பு, சுகந்தகாரி, உற்சாககாரி, உதராமாதஹரகாரி, மூத்திரகாரி, சங்கோசனகாரி, க்ருமிநாசனி, லகுமலவிரேசனி, வீரியவர்த்தனி, ரசாயனி; வெளியில் உபயோகிக்க கிருமிகளைக் கொல்லும்.

**உபயோகம்:**—இதில் இரண்டு விதங்களுண்டு, வெள்ளை நிறமுள்ளது ரசாயனியாக உபயோகிக்கச் சிறந்தது. இது சாதாரணமாக கசப்பு ரசாயனிகளோடும் சுகந்தகாரிகளோடும் சேர்த்து வழக்கமாயுமுள்ள மலபந்தம், அஜீரணம், வயிற்றுவலி, வயிற்று உப்பிசம், பக்க வாதம் ஆகிய இவைகளிலும் இன்னும் நரம்புகளைப்பற்றிய வியாதிகளிலும் உபயோகிக்கப்படுகிறது. இதை காக்கைவலியில் கொடுக்கும்படி பாவப்பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கொளுத்தி எடுத்த இதன் சாம்பல் தேனோடு குழந்தைகளுக்கு புளி ஏப்பத்திலும் வாந்தியிலும் கொடுக்கப்படுகிறது. இதை அதிசாரத்திலும், கிரகணியிலும், இருமலிலும் இன்னும், வயிற்றைப் பற்றிய வியாதிகளிலும் கொடுக்கப்படுகிறது. இது வீரிய வ்ருத்தி மருந்துகளின் கூட்டுச் சரக்கில் ஒன்றாகும்.

**வெளிப்பிரயோகம்:**—இதைப் புண்களுக்கு மேல் தூவுவதற்கு உபயோகப்படுகிறது. இதை சமஎடை கடுகோடு சேர்த்து ஜலத்தால் அறைத்து வீக்கங்களுக்கு பத்திடலாம். வலியோடு கூடிய வீக்கங்களுக்கு இதைக் கையாளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**93.** வாகுசீ.

**பெயர்கள்:**—லத்தின் சோரேலியா கொரைலிபோலியா.
தமிழ் கார்போகரிசி.
தெலுங்கு பாவஞ்சாலு.
மலேயாளம் கார்கோலரி.
கன்னடம் பாவுசிகே.
உருடு பவன்ச், பவன்சி

அளவு:—10 முதல் 30 தானிய எடைவரைப் பொடியைக் கொடுக்கலாம்.

**செய்கை:**—ரத்த சுத்திகாரி.

**உபயோகம்:**—வெண் குஷ்டத்தில் உள்ளும் புறமும் உபயோகிக்க இது நல்ல சரக்கு. இதன் பொடியை ஸ்நானப் பொடிகளிலும், பூச்சுகளிலும் உபயோகிக்கலாம். பாதாளயந்திர வழியாக இதிலிருந்து இறக்கின எண்ணெயையும் மேல் பூச்சுகள் செய்வதற்கு உபயோகிக்கலாம். வெண் குஷ்டங்களில் சீரடி முத்தோடும், நிலினியோடும் சேர்த்து இதை உள்ளும் புறமும் உபயோகிக்கலாம்.



**94.** வம்சலோசனா.

**பெயர்கள்:**—லத்தின் பேம்பூ மன்னா.
தமிழ் மூங்கிலுப்பு.
தெலுங்கு வெதுருப்பு.
கன்னடம் பெதுருப்பு.
மலேயாளம் முலான் கர்பூரம்.
உருடு தபாகூீர்.

அளவு:—5 முதல் 15 தானிய எடைவரைத் தேனோடாயினும் நெய்யோடாயினும் சர்க்கரையோடாயினும் உபயோகிக்கலாம்.

**செய்கை:**—சீதளகாரி, புஷ்டிகாரி, ரசாயனி.

**உபயோகம்:**—இதை இருமல், க்ஷயம், ஆஸ்த்மா, ஜுரம் இவைகளில் உபயோகிக்கலாம். இதை இதர சங்கோசன காரி மருந்துகளோடு சேர்த்து நாட்பட்ட அதிசாரத்திலும் ரத்தப் போக்கிலும் உபயோகிக்கலாம். இதில் ரத்தத்தையும் தசைநாருகளையும், எலும்பையும் முக்கியமாய் நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்கான சில உயிர்ப்பிராணிகளின் உப்பு சம்பந்தம் இருக்கிறாற் போல் தெரிகிறது. மூத்திரதாரையின் பிரகோபத்தை சமனம் செய்வதிலும், நுரையீரலைச் செப்பனிடுவதிலும் உபயோகமுள்ளதாகதெரிகிறது. இது ஆண்மைக் குறைவை அகற்றி சீதளகாரியாக வேலை செய்வதால் முத்து அல்லது பிரவாளத்துக்கு (பவளம்) பதிலாக உபயோகப்படுத்தப்படுகிறது. இது சியவனப்பிரகாசாவலேகம், வாஸாவலேஹம் முதலிய பிரசித்திபெற்ற ரசாயினிகளிலும் கபத்தை வெளியாக்குபவைகளான தாளிசாதி, சிதோபலாதி சூரணங்களிலும் சேருகிறது. 10 அல்லது 15 தானிய எடையுள்ள பொடியை தேனில் கலக்கி நெல்லிக்காயுடன் கூட்டி (நெல்லிக்காய் முரபா) க்ஷயத்திலும் இன்னும் வலிவை இழக்கக்கூடிய வியாதிகளிலும் ரசாயனியாக உபயோகிக்கலாம் இதை நாட்பட்ட சிழ்ப்பிரமேகத்தில் உபயோகிக்கலாம். வீரிய வ்ருத்தியை உண்டாக்கக் கூடிய மருந்துகளின் கூட்டுச் சரக்கில் இது ஒன்று.

**95.** வாசா.

**பெயர்கள்:**—லத்தின் ஆடாதோடா வாசிகா.
தமிழ் ஆடாதோடை.
தெலுங்கு அட்டசரமு.
கன்னடம் ஆடு சோகி.
மலேயாளம் அடலோடகம்.
உருடு ஆடாதோடா.

அளவு:—கால் முதல் அரை அவன்சு சுரசத்தை தேனோடு கொடுக்கலாம். வமனம் ஆகவேண்டுமானால் அதிக அளவில் கொடுக்கவும். இலையையும் வேரையும் கஷாயமாக்கி அரை முதல் 2 அவுன்சு வரை தேனுடனாவது தேன் இல்லாமலாவது கொடுக்கலாம்.

**செய்கை:**—கபஹாரி, இசுவுகளை தடுக்கும், வியதாபேதஹாரி, ரத்த சுத்திகாரி, ரசாயனி.

**உபயோகம்:**—இது இருமலுக்கு ஒரு சாதாரண மருந்து. இதை கஷாயமாகவும் பானகமாகவும் கொடுக்கலாம். திப்பிலி, சுக்கு, சக்கரை, தேன் முதலியவைகளுடன் கூட்டி லேகியமாக எல்லா நுரையீரல் வியாதிகளிலும் கொடுக்கலாம் (வாசா அவலேகியத்தைப் பார்க்க). இந்தச் சரக்கை அநேக நாள் கையாட வேண்டுமானால் வாசா அரிஷ்டம் செய்து உபயோகிக்கலாம். உடம்பில் எந்த பாகத்திலிருந்தாவது ரத்தம் வந்தால் (ரத்த பித்

தம்) இதை ஒரு குறித்த மருந்தாக உபயோகிக்கலாம். கபமும் பித்தமும் கூடி இருக்கிற எல்லா ஜ்வரங்களிலும் இதர சரக்குகளோடு சேர்த்து இது கஷாயமாக கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், ஆஸ்துமாவிலும் கபத்தை உடனே வெளிப்படுத்த வேண்டும் பொழுது புதிதாய் எடுத்த இதன் ரஸத்தை அதிக அளவில் கொடுக்க குணம் உண்டாகும். பின் இந்த சரக்கினால் செய்தமருந்தை கொடுக்கலாம்.

## 96. விபீதகி.

**பெயர்கள்:**—லத்தின் டர்மினலியா பெலெ[ரிகா.

| | |
|---|---|
| தமிழ் | தானிக்காய். |
| தெலுங்கு | தானிகாய. |
| கன்னடம் | சாந்தி காய. |
| மலையாளம் | தானிக்காய். |
| உருடு | பல்ல. |

**அளவு:**—5 முதல் 30 தானிய எடைவரை சூரணமாகக் கொடுக்கலாம்.

**செய்கை:**—சங்கோசன காரி கிருமி நாசனி, லகு விரேசனி (அதிக அளவில்), ரசாயனி.

**உபயோகம்:**—இது திரிபலாவில் ஒரு சரக்கு. இதை கூட்டுச் சரக்காக உபயோகப்படுத்துகிறார்கள். இதை தொண்டை வியாதிகளில் தேனோடு சேர்த்து உபயோகிக்கிறார்கள். இதனுடைய சங்கோசனகாரி குணத்தினால் இதை சீதபேதி, கிரகணி முதலிய வியாதிகளிலும் இன்னும் இதர வயற்றையும் குடலையும் பற்றிய வீக்கத்தோடு கூடிய வியாதிகளிலும் உபயோகிக்கிறார்கள். இதனுடைய கஷாயத்தை தேனோடு கூட்டி வாய்ப்புண், தொண்டைப் புண் முதலிய வியாதிகளில் நல்ல தாது க்ஷீண ரோதிகாரியாகனதும், சங்கோசன காரியானதுமான வாய் கொப்பளிக்கும் மருந்தாக உபயோகிக்கிறார்கள். மயிர்வளரும் தைலங்களில் இதை கருப்பு நிறம் கொடுப்பதற்கு உபயோகிக்கிறார்கள். குணத்தில் கடுக்காயை காட்டிலும் இது சாந்த குண முள்ளதாகத் தெரிகிறது.

## 97. விடங்கம்.

**பெயர்கள்:**—லத்தின் எம்பலியா ரைப்ஸ்.

| | |
|---|---|
| தமிழ் | வாய் விடங்கம். |
| தெலுங்கு | வாய் விடங்காலு. |
| கன்னடம் | வாயு விடங்க. |
| மலையாளம் | விசாலரி. |
| உருடு | பேபிடங். |

**அளவு:**—கால் முதல் 1 தோலாவரை தண்ணீரோடு அரைத்து வடிகட்டி சிறிது சக்கரையுடனாவது தேனுடனாவது ஆமணக்கு எண்ணெயுடனாவது சேர்த்துக் கொடுக்க. 5 முதல் 15 தானிய எடைவரை அடிக்கடி தனியாகவாவது இதர சரக்குகளோடாவது சேர்த்து கொடுக்கலாம்.

**செய்கை:**—உதரவாதஹரகாரி, கிருமி நாசனி, வியதாபேதகாரி.

**உபயோகம்:**—இது கிருமிகளை கொல்லுவதற்கு தனியாக வாகிலும் இதர சரக்குகளோடு சேர்த்தாகிலும் கொடுக்கப் பேர் பெற்றது. இது சில நாட்கள் கொடுத்த பின் ஆமணக்கு எண்ணெயாவது, சிவதை சூரணமாவது கொடுக்கப்படுகிறது. உருண்டை புழுக்களுக்கு புரசவிதையையும் கருஞ் சீரகத்தையும் இன்னும் இதர சரக்குகளையும் இத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. கட்டைக் கிருமிகளை ... களையின்

JL
LCm211, V2SST
N28-9.10
... ஆணைக் காப்பகம்
சென்னை-600 008
... லகம்

# சரீர புஷ்டியும் பலமும்

## உண்டாவதற்கு ஓர் முறை

எங்களது

சியவனப்ராச லேஹ்யத்தை உபயோகித்துப் பாருங்கள்.

புதிய நெல்லிக்கனிகளைக் கொண்டும் பல மூலிகைகளைக் கொண்டும் செய்யப்பட்டது. மிகவும் உயர்ந்த ரஸாயனம். கபத்தை சுகமாக வெளிப்படுத்தும்.

(1) க்ஷயம், இரைப்பு (சுவாஸம்), காஸம் முதலியவைகளில் விசேஷமாக உபயோகிக்கப்படுகிறது.

(2) இது பசியை அதிகப்படுத்தி இயற்கையாயுள்ள மலச்சிக்கலையும் போக்குவதால் காட்லிவர் ஆயில் என்னும் மீன் எண்ணெயை விட சிறந்ததாகும்.

(3) மனமகிழ்ச்சியைத் தரக்கூடிய ருசியுள்ளது.

(4) நீடித்து உபயோகித்து வந்தால் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய இருமல்களில் சுகமாக கபத்தை வெளிப்படுத்தும்.

(5) சரீரபுஷ்டியை யுண்டாக்குவதில் சிறந்தது. அதிக ஸம்போகத்தினாலாவது வலிவின்மையினாலாவது உண்டாகும் கோளாறுகளையும் சரீரத்திலுண்டாகும் மற்ற கோளாறுகளையும் போக்கும்.

விலை

4 அவுன்ஸ் ரூ. 1.

1 பவுன் ரூ. 3.

கிடைக்குமிடம் :—

ஆந்திர ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

43, ஹாரிஸ் ரோட், மவுண்டு ரோட்டு, மதராஸ்.

இன்றே மருந்துகளின் விலை பட்டிக்கு எழுதுங்கள்.

## புதிய தமிழ் வைத்திய பிரசுரங்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| **பாரத மருத்துவ சரிதம்.** பண்டைகாலத்தில் நமது தேசத்தில் வைத்திய முறை கையாளப்பட்ட விதம், பின்னர் அதன் க்ஷீண தசை, முதலியவைகளை விளக்கும் அரிய நூல் | .... | 0 | 8 |
| **பண்டித டி. கோபாலாசார்லுவின் ஜீவிய சரிதம்.** தென்னாட்டில் ஆயுர் வேதத்தை நிலைநாட்டிய பெரியாரின் சரித்திரம் | .... | 0 | 2 |
| **மாதா சிசு பரிபாலனம்** கர்ப்பிணி ஸ்திரீகள், பிறந்த குழந்தைகள், இவர்களை எப்படிப் பாதுகாப்பது என்பதை செவ்வனே விளக்கும் புத்தகம் | .... | 0 | 6 |
| **வியாதிகளைத் தடுப்பது எங்ஙனம்** சாதாரணமாக உண்டாகும் வியாதிகளைத் தடுக்கக்கூடிய எளிய சாஸ்த்திரீய முறைகளைக் கூறும் புத்தகம் | .... | 0 | 2 |

முக்கிய கவனிப்பு :—இப்பத்திரிகையின் சந்தாதாரருக்கு மேற்கண்ட புத்தகங்கள் ¾ விலைக்கு கொடுக்கப்படும்.

புத்தகங்கள் கிடைக்குமிடம் :—

**பத்திராதிபர், "ஸ்ரீ தன்வந்தரி,"**

43, ஹாரிஸ் ரோட், மவுண்ட் ரோட், சென்னை.



Printed at the Dhanvanthari Press, Madras.

Published by Dr. A. Lakshmipathi B. A., M. B., & C. M., at 43, Harris Road, Madras.